| [சிற்றேடு] குடியிருப்பாளர் கருத்துக்கணிப்பு | [Brochure] Tenant Survey |
| --- | --- |
| குடியிருப்பாளர் கருத்துக்கணிப்பு<br><br>உங்கள் பின்னூட்டம். எங்கள் உறுதிப்பாடு.<br><br>குடியிருப்பாளர் கருத்துக்கணிப்பு பற்றியும் அது ஏன் முக்கியமானது என்பது பற்றியும் அறிந்துகொள்ளுங்கள். | The Tenant Survey<br><br>Your feedback. Our commitment.<br><br>Learn about the Tenant Survey and why it is important. |
| **குடியிருப்பாளர் கருத்துக்கணிப்பு என்றால் என்ன?**<br>குடியிருப்பாளர் கருத்துக்கணிப்பு என்பது சுமார் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை Toronto Community Housing (TCHC) -இல் வசிக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அனுப்பப்படும் **கேள்வித்தாள்** ஆகும். | **What is the Tenant Survey?**<br>The Tenant Survey is a **questionnaire** sent to every Toronto Community Housing (TCHC) household approximately **every two years**. |

| | |
|---|---|
| இந்தத் தரவை சேகரித்து பகுப்பாய்வு செய்ய தனித்தியங்கும் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றை நாங்கள் பயன்படுத்துகிறோம். ஒவ்வொரு குடும்பத்தின் **பதில்களும் அடையாளம் வெளியிடப்படாமல் பாதுகாக்கப்படுவதை** நாங்கள் உறுதிசெய்கிறோம். | We use an independent research company to collect and analyze the data, making sure individual **responses are kept anonymous**. |
| **நாங்கள்** என்னென்ன **கேள்விகள் கேட்போம்?**<br>கருத்துக்கணிப்பில் பின்வருபவை உட்பட பல தலைப்புகள் உள்ளடக்கப்பட்டிருக்கும்:<br>• **தகவல் தொடர்புகள்:** நாங்கள் உங்களுக்குத் தகவல்களைத் தெரிவிக்கிறோமா?<br>• **பாதுகாப்பு** மற்றும் பாதுகாத்தல்**:** உங்கள் வீட்டிலும் சமூகத்திலும் பாதுகாப்பாக உணர்கிறீர்களா?<br>• **வாடிக்கையாளர் சேவை:** TCHC ஊழியர்களிடமிருந்து பெறும் சேவை உங்களுக்குத் திருப்தியளிக்கிறதா? | **What questions will we ask?**<br>The survey will cover several topics, including:<br>• **Communications:** Are we keeping you informed?<br>• **Safety and security**: Do you feel safe in your home and community?<br>• **Customer service:** Are you happy with the service you receive from TCHC staff? |

- **பராமரிப்பு:** நாங்கள் சேவை வழங்க எடுத்துக்கொள்ளும் நேரம் மற்றும் சேவை தரம் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
- **ஒட்டுமொத்த திருப்தி:** உங்களின் வசிப்பிட நிலைமைகள் உங்களுக்கு எந்தளவிற்கு திருப்தியளிப்பதாக உள்ளது?

**நீங்கள் ஏன் இந்த கருத்துக்கணிப்பில் பங்கேற்க வேண்டும்?**
**எடுக்கப்படும் முடிவுகளில் நீங்கள் செல்வாக்கு செலுத்துவது.** உங்களுக்கும் உங்கள் சமூகத்திற்கும் எது முக்கியம் என்பது பற்றி எங்களிடம் சொல்வதற்கு கருத்துக்கணிப்பு உங்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்கும்.
**நாங்கள் மேம்பட உதவுதல்.** மேம்பாடு தேவைப்படும் பகுதிகளை அடையாளம் காண உங்கள் பின்னூட்டம் எங்களுக்கு உதவும். இது அனைவரும் மேலும் சிறந்த திட்டங்கள் மற்றும் சேவைகள் பெறுவதற்கு வழிவகுக்கும்.

- **Maintenance:** How do you feel about our response times and service quality?
- **Overall satisfaction:** How satisfied are you with your living situation?

**Why should you take the survey?**
**Have a say.** The survey gives you a chance to let us know what is important to you and your community**.**
**Help us improve.** Your feedback helps us identify areas that need improvement. This leads to better programs and services for everyone.

| | |
|---|---|
| **எதிர்காலத்தை வடிவமைத்தல்.** உங்கள் பதில்கள் எங்களது பணித் திட்டங்களுக்கு வழிகாட்டும். இது எங்களது வளங்கள் மற்றும் உழைப்பை எங்கு செலுத்த வேண்டும் என்பதை நாங்கள் தெரிந்துகொள்ள உதவுகிறது. | **Shape the future.** Your responses guide our work plans. That helps us know where to focus our efforts and resources. |
| **கருத்துக்கணிப்பு முடிவுகளை நாங்கள் எவ்வாறு பயன்படுத்துகிறோம்**<br>• **குடியிருப்பாளர் திருப்தி.** முக்கிய பகுதிகளில் குடியிருப்பாளர் திருப்தியை நாங்கள் எவ்வளவு சிறப்பாக மேம்படுத்துகிறோம் என்பதை முடிவுகள் எங்களுக்குக் காட்டுகின்றன.<br>• **தேவைகளைப் புரிந்துகொள்வது.** முடிவுகள் வெவ்வேறு சமூகங்களில் உள்ள குடியிருப்பாளர்களின் தேவைகளைப் புரிந்துகொள்ள ஊழியர்களுக்கு உதவுகின்றன. அது ஆதரவு எங்கு அதிகம் தேவைப்படுகிறதோ அந்த இடத்தில் ஆதரவை வழங்க எங்களுக்கு உதவுகிறது. | **How we use the survey results**<br>• **Tenant satisfaction.** The results show us how well we are improving tenant satisfaction in key areas.<br>• **Understand needs.** The results help staff understand the needs of tenants in different communities. That helps us offer support where it is needed most. |

| | |
|---|---|
| • **மேலும் சிறப்பாக திட்டமிடுவது.** நாங்கள் நிறுவனம் முழுவதிலுமுள்ள அணிகளுடன் முடிவுகளைப் பகிர்ந்துகொள்கிறோம். முடிவுகள் எங்கள் பணிகளுக்கு வழிகாட்டியாக இருப்பதால் குடியிருப்பாளர்களுக்கு எது முக்கியமோ அதில் எங்களால் கவனம் செலுத்த முடியும்.<br>• **சமூக நடவடிக்கை.** உங்கள் பகுதியில் உள்ள மிக முக்கியமான சிக்கல்களைத் தீர்க்கும் திட்டங்களை உருவாக்க குடியிருப்பாளர் குழுக்களுடன் நாங்கள் ஆலோசனை நடத்துகிறோம்.<br>• **மக்கள் தொகையியல் பற்றிய தகவல்கள்.** வயது, பாலினம் மற்றும் இனம் போன்ற தகவல்கள் வெவ்வேறு குடியிருப்பாளர் குழுக்கள் பற்றிய தேவைகளை நாங்கள் புரிந்துகொள்வதற்கு உதவுகின்றன. | • **Better planning.** We share the results with teams across the organization. The results guide our work so we can focus on what matters most to tenants.<br>• **Community action.** We consult with tenant groups to develop plans that address the most important issues in your area.<br>• **Demographic information.** Information like age, gender, and race helps us understand the needs of different tenant groups. |

| | |
|---|---|
| **குடியிருப்பாளர் பின்னூட்டம் எங்கள் சேவைகளை வடிவமைக்கின்றன.**<br>மேலும் அறிய க்யூ.ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது கீழுள்ள இணைப்பைப் பார்க்கவும்.<br>Torontohousing.ca/survey | **Tenant feedback shapes our services.**<br>Scan the QR code or visit the link below to learn more.<br>Torontohousing.ca/survey |